**கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,384,053 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஜர்னல் குறிப்புகள் மூலம் சரி செய்கிறேன். |
| (ஆ) | ரூபா 866,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 06 கணக்கு விடயங்களின் மீதிகளை துணைப் பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்கையில், ரூபா 8,265,467 இணங்காமை நிலவியது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சீராக்கம் செய்ய வேண்டும். | வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்கிறேன். |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 10,200,748 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 6,726,809 ஆனது | பெற வேண்டிய தொகைகள் அறவிடப்பட வேண்டும் | எதிர் காலத்தில் பெற வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,237,331 ஆனதுடன், 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 5,975,871 ஆனது | செலுத்த வேண்டிய தொகைகளை தீர்க்க வேண்டும் | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை

தகவல்கள் சமர்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 5,905,919 ஆன 03 கணக்கு விடயங்கள் தொடரபாக பதிவேடுகள் மற்றும் கோவைகள் போன்றவைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | 2020 ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.5 இணங்காமைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நி.பி. 1645 | வாகனங்கள் தொடர்பாக நடாத்தப்படும் லொக் புத்தகங்கள் நாளாதுவரையாக நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணப் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சரியாக நாளாதுவரை ஆக்குகிறேன். |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | 09 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | குறித்த பரிசீலனைகளை மேற்கொளள் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.6 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண பசுமை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் பேராதெணிய வாராந்த சந்தையை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் ரூபா 1,381,250 ஆன வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருக்கையில், சபையினால் அவ்வேலைகளை பூர்த்தி செய்து, சபை நிதியத்திலிருந்து ரூபா 1,700,000 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த ஒதுக்கீட்டின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | பிரதான செயலகத்தினால வேலைகளை இடைநிறுத்த ஆலோசணை வழங்கும் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததனால், கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 30,704,703 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 70,052,176 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,454,709 | 2,363,786 | 2,287,868 | 4,355,086 | 6,117,000 | 2,917,135 | 2,992,084 | 2,405,485 |
| (ii) | வாடகை | 5,694,561 | 4,027,193 | 3,912,775 | 2,289,560 | 3,703,200 | 3,647,760 | 3,203,395 | 2,177,225 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,352,750 | 2,027,068 | 1,964,668 | 312,000 | 1,955,100 | 1,856,875 | 1,687,675 | - |
| (iv) | ஏனைய வருமானம | 33,985,750 | 29,172,637 | 76,273,568 | 6,215,168 | 37,857,500 | 32,685,098 | 12,686,564 | 53,268,554 |
| | கூட்டுத் தொகை | 44,487,770 | 37,590,684 | 84,438,879 | 13,171,814 | 49,632,800 | 41,106,868 | 20,569,718 | 57,851,264 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 436,658 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 57,124,480 உம் ஆனது. | கிடைக்க வேண்டிய தொகைகளை அழைப்பித்துக் கொள்ள வேண்டும். | பட்டியல்கள் கிடைத்துக் கொண்டிருப்பதுடன், பணத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 06 விடயங்களிற்காக துணைச் சட்டம் விதிக்கப்படவில்லை. | சட்ட பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணைச் சட்ட உருவாக்கக் குழுவை அமைத்து துணைச் சட்டங்களை உருவாக்க மற்றும் விதிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) போதியளவு மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பொலித்தீன் மீள்சுழற்சி கருத்திட்டம் மற்றும் இயற்கை பசளை கொட்டில் நிர்மாணிக்க ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 52,000,000 ஒதுக்கீட்டினை பயன்படுத்தி இருக்கவில்லை. | ஒதுக்கீட்டு நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். | காணியொன்று தெரிவு செய்யப்பட்டுள்ள போதும், மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இக்காணி குறித்த விடயத்திற்கு பொருதமில்லை என அறிவித்துள்ளது. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,876,250 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் காணப்படும் உடல் சுக மத்திய நிலையத்தின் பயிற்சி நடவடிக்கை தொடர்பான பொறுப்புக்கள் ஒழுங்கான உடன்படிக்கை இன்றி 2019 ஏப்ரல் முதல் நவம்பர் வரை நபரொருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சமர்பித்து முன் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் வெற்றிடமும் மிகையும். | | |
| 2019 திசெம்பர 31 திகதியன்று சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினுள் 08 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | தற்போது ஆட்சேர்ப்பு தடைசெய்யப்பட்டுள்ளதால், இவ் வெற்றிடங்கள் நிலவுகின்றன. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதியை இனங்காண முடியாக புகைக் கருவி ஒன்று மற்றும் புல் வெட்டும் இயந்திரமொன்றும் விளைவற்று நிலவின. | சொத்துக்களை விளைவற்றதாக வைத்துக் கொள்ளாது பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். | விலை மதிப்பீட்டிற்காக இயந்திர பொறியியலாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அறிக்கை கிடைத்த பின் முன் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ரூபா 480,000 பெறுமதியான உயிர் வாயு அலகு 05 ஆண்டுகளாக விளைவற்று நிலவியது. | சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். | உயிர் வாயு அலகு தொடர்பாக உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு, முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5 பெறுகைகள்

#### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பள்ளேகம கங்கஹவெள பாதை அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்திய தளவரிசை கற்களுக்காக (Payment for Paving Blocks) அளவுத் திட்டத்திற்கமைய காணப்பட வேண்டிய பொழிப்பு பலம் (Comprehensive Strenth) இல்லை என தகைமை பரிசோதனை அறிக்கை மூலம் உறுதியாகி இருக்கையில், 85.07 சதுர மீட்டர் தளவரிசை கற்களுக்கு ரூபா 242,109 ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவிற்கு முன்னர் உரிய தரம் தொடர்பாக பரீட்சிக்க வேண்டும். | மீண்டும் தகைமை பரிசோதனை அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

### 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### தீர்க்கப்படாத அவதானங்கள் மற்றும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 – 3.5.1<br>தீர்த்துக் கொள்ளப்படாத ரூபா 28,764,697 பெறுமதியான 25 காணிகள் மற்றும் கட்டிடங்கள் சபைக்கு சொந்தமாக காணப்பட்டன. | சொத்துக்கள் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும். | சொத்துக்களின் கணிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது முடிவுற்றவுடன் குறித்த நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

(ஆ) 2018 – 3.5.2 (ஆ)

----------------------

| | | |
|---|---|---|
| 2010 ஆண்டு முதல் பெறுமதி இனங்காணப்படாத 147 நீர் உபகரண உருப்படிகளை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது அழிவடைய இடமளிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மூலம் உச்ச பயனை பெற்றுக் கொள்ள வேண்டும். | ஏலத்தில் விற்பனை செய்ய மகா சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது. |

(இ) 2018 – 3.6

--------------

| | | |
|---|---|---|
| சபையினால் நானாவித நடவடிக்கைகளுக்கு வேறு நிறுவனங்களில் வைப்புச் செய்துள்ள, ரூபா 276,693 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெற வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் குறித்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |